# ஒப்பீடு

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.*
   A. *லூக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூக்கா 1:1-4).*
   B. *யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).*
   C. *மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).*
   D. *லூக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூக். 3:23-38).*
   E. *யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூக். 1:5-25).*
   F. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூக். 1:26-38).*
   G. *(கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியாயிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக். 1:39-56).*
   H. *யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூக். 1:57-80).*
   I. *இயேசுவின் வருகை பற்றி யோசேப்புக்கு அறிவிப்பு (மத். 1:18-25).*
   J. *இயேசுவின் பிறப்பு (லூக். 2:1-7).*
   K. *இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதல் (லூக். 2:8-20).*
   L. *இயேசுவுக்கு விருத்தசேதனம் மற்றும் பெயரிடுதல்; தேவாலய ஆராதனை (லூக். 2:21-39).*
   M. *கிழக்கிலிருந்து ஞானிகளால் இயேசு சந்திக்கப்படுதல் (மத். 2:1-12).*
   N. *எகிப்துக்கு ஓடிப்போகுதலும் பெத்லகேமில் ஆண் குழந்தைகள் கொல்லப்படுதலும் (மத். 2:13-18).*
   O. *குழந்தை இயேசு எகிப்தில் இருந்து நாசரேத்தூருக்குக் கொண்டு வரப்படுதல் (மத். 2:19-23; லூக். 2:39ஆ வைக் காணவும்).*
   P. *இயேசு நாசரேத்தூரில் வாழ்தல்; அவரது பன்னிரெண்டு வயதில் எருசலேமுக்கு ஒரு பயணம் (லூக். 2:40-52).*

II. *யோவான் ஸ்நானனின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோவானின் ஊழியம் (மத். 3:1-6; மாற். 1:1-6; லூக். 3:1-6).*
   B. *யோவானின் செய்தி (மத். 3:7-12; மாற். 1:7, 8; லூக். 3:7-18).*

III. இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல்.
   A. யோர்தான் நதியில் யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் பெறுதல் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34).
   B. வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப்படுதல் (மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13).
   C. இயேசுவைப் பற்றி யோவானின் சாட்சியம் (யோவா. 1:19-34).
   D. (யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).
   E. (கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).
   F. (கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).

IV. முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.
   A. இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.
      1. தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).
      2. நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).
   B. யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).
   C. யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாறுதல்.
      1. கடந்து செல்லுதலுக்கான காரணங்கள் (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-3).
      2. சமாரியாவில் நடந்த சம்பவம் (யோவா. 4:4-42).
      3. கலிலேயா வந்து சேருதல் (லூக். 4:14; யோவா. 4:43-45).
   D. கலிலேயாவில் இயேசுவின் போதனை பற்றிய ஒரு பொதுவான விவரம் (மத். 4:17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15).
   E. கானாவூரில் இரண்டாவது அற்புதம் (யோவா. 4:46-54).
   F. கலிலேயாவின் கப்பர்நகூமுக்கு மாறுதல் (மத். 4:13-16).
   G. நான்கு மீனவர்களை அழைத்தல் (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11).
   H. கப்பர்நகூமில்: ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவிபிடித்த ஒருவரைக் குணமாக்குதல் (மாற். 1:21-28; லூக். 4:31-37).
   I. கப்பர்நகூமில்: பேதுருவின் மாமியும் மற்றவர்களும் குணமாக்கப்படுதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41).
   J. கலிலேயாவில்; இயேசுவின் முதல் போதனை மற்றும் குணமாக்குதலின் பயணம் (மத். 4:23-25; மாற். 1:35-39; லூக். 4:42-44).

K. *கலிலேயாவில்: ஒரு தொழுநோயாளியைக் குணமாக்குதல் - மற்றும் அதன் விளைவாக உணர்வெழுச்சி ஏற்படுதல் (மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-16).*
L. *கப்பர்நகூமுக்குத் திரும்புதல்: திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்குதல் (மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26).*
M. *கப்பர்நகூமுக்கு அருகில்: மத்தேயுவை அழைத்தல் (மத். 9:9; மாற். 2:13, 14; லூக். 5:27, 28).*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை.*
A. *இயேசு, சப்பாணியாயிருந்த ஒரு மனிதரை ஓய்வுநாளில் குணமாக்கி அச்செயலைத் தற்காத்தார் (யோவா. 5:1-47).*
B. *இயேசு, ஓய்வுநாளில் கதிர்கொய்த தமது சீஷர்களைத் தற்காத்தார் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5).*
C. *இயேசு, சூம்பின கையுடைய ஒரு மனிதரை ஓய்வுநாளில் குணமாக்கி தற்காத்தார் (மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11).*
D. *இயேசு, கலிலேயாக் கடலுக்கு அப்பால் திரளான கூட்டத்தாரைக் குணமாக்கினார் (மத். 12:15-21; மாற். 3:7-12).*
E. *ஜெபத்திற்குப் பின்பு இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16).*
F. *மலைப் பிரசங்கம்.*
1. *அறிமுகக் கூற்றுக்கள் (மத். 5:1, 2; லூக். 6:17-20).*
2. *பாக்கிய வசனங்கள்: மேசியாவின் பிரஜைகளுக்கான வாக்குத்தத்தங்கள் (மத். 5:3-12; லூக். 6:20-26).*
3. *மேசியாவின் பிரஜைகளினுடைய செல்வாக்கு (மற்றும் பொறுப்புகள்) (மத். 5:13-16).*
4. *மேசியாத்துவ பழைய ஏற்பாட்டு போதனைக்கும் - மற்றும் பழைய ஏற்பாட்டு போதனை பற்றி மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களுக்குள்ள உறவு (மத். 5:17-48; லூக். 6:27-30, 32-36).*
5. *மதரீதியான செயல்கள் காட்சிக்காக அல்ல ஆனால் இருதயத்தில் இருந்தே வருவதாயிருக்க வேண்டும் (மத். 6:1-18).*
6. *பரலோக பொக்கிஷங்களின் பாதுகாப்பானது பூமிக்கு உரிய பெருங்கவலைகளுடன் நேர்மாறாக ஒப்பிடப்பட்டது (மத். 6:19-34).*
7. *தீர்க்கப்படுதல் பற்றிய போதனை (மத். 7:1-6; லூக். 6:37-42).*
8. *ஜெபத்தைப் பற்றிய போதனை (மத். 7:7-11).*

9. பொன் விதி (மத். 7:12; லூக். 6:31).
10. இரண்டு வழிகள் - மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத். 7:13-23; லூக். 6:43-45).
11. முடிவுரையும் பயன்பாடும் (கட்டுபவர்கள் இரண்டு பேர்) (மத். 7:24-29; லூக். 6:46-49).

G. நூற்றுக்கு அதிபதியொருவரின் வேலையாள் குணமாகுதல் (மத். 8:1, 5-13; லூக். 7:1-10).
H. ஒரு விதவையின் மகன் உயிருடன் எழுப்பப்படுதல் (லூக். 7:11-17).
I. யோவான் ஸ்நானனுக்குப் பதில் அளித்தல் (மத். 11:2-30; லூக். 7:18-35).
J. இயேசுவின் பாதங்கள் அபிஷேகம் செய்யப்படுதல் (லூக். 7:36-50).
K. கலிலேயாவில் இரண்டாவது பயணம் (லூக். 8:1-3).
L. தேவதூஷணக் குற்றம் சாட்டப்படுதல்கள் (மத். 12:22-37; மாற். 3:20-30; லூக். 11:14-23).
M. அடையாளம் தேடுபவர்கள் (மத். 12:38-45; லூக். 11:16, 24-26, 29-36).
N. இயேசுவின் குடும்பம் (மத். 12:46-50; மாற். 3:31-35; லூக். 8:19-21; 11:27, 28).
O. உவமைகளின் முதல் மாபெரும் தொகுப்பு.
   1. நிகழ்வுவேளையும் அமைவும் (மத். 13:1-3; மாற். 4:1, 2; லூக். 8:4).
   2. விதைப்பவன் உவமையும் விளக்கமும் (மத். 13:3-23; மாற். 4:3-25; லூக். 8:5-18).
   3. மறைவான வளர்ச்சியின் உவமை (மாற். 4:26-29).
   4. களைகளின் உவமை (மத். 13:24-30).
   5. கடுகு விதை, புளித்தமா ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:31-35; மாற். 4:30-34).
   6. களைகளின் உவமை விளக்கப்படுதல் (மத். 13:36-43).
   7. பொக்கிஷம், முத்து ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:44-46).
   8. மீன்பிடி வலையின் உவமை (மத். 13:47-53).
P. புயலை அமர்த்துதல் (மத். 8:18, 23-27; மாற். 4:35-41; லூக். 8:22-25).
Q. அசுத்த ஆவி பிடித்த இருவரைக் குணமாக்குதல் (மத். 8:28-34; 9:1; மாற். 5:1-21; லூக். 8:26-40).
R. பாவிகளுடன் உண்ணுதல் (மற்றும் உபவாசித்தல் பற்றிய உரை) (மத். 9:10-17; மாற். 2:15-22; லூக். 5:29-39).
S. யாவீருவின் மகளை உயிர்ப்பித்தல் (மற்றும் பெரும்பாடு உள்ள ஒரு பெண்ணைக் குணமாக்குதல்) (மத். 9:18-26; மாற். 5:22-43; லூக். 8:41-56).

T. *பார்வையற்றவரையும் அசுத்த ஆவி பிடித்தவரையும் குணமாக்குதல் (மற்றும் விமர்சிக்கப்படுதல்) (மத். 9:27-34).*

U. *நாசரேத்தூருக்கு வருதல் (மற்றும் புறக்கணிக்கப்படுதல்) (மத். 13:54-58; மாற். 6:1-6; லூக். 4:16-31).*

V. *கலிலேயாவுக்கு இயேசுவின் மூன்றாம் பயணம் (மற்றும் பன்னிருவருக்கு அறிவுறுத்துதல்) (மத். 9:35-38; 10:1-42; 11:1; மாற். 6:6-13; லூக். 9:1-6).*

W. *இயேசுவின்மீது ஏரோதுவின் ஆர்வம் (மற்றும் யோவான் ஸ்நானனின் மரணம் பற்றிய விவரம்) (மத். 14:1-12அ; மாற். 6:14-29; லூக். 9:7-9).*

X. *ஏரோதுவின் ஆளுகைப் பகுதியில் இருந்து இயேசு விலகிச் செல்லுதல் (மற்றும் திரும்பி வருதல்).*

1. *பன்னிருவர் திரும்பி வருதலும் கலிலேயாக் கடலின் கிழக்குக் கரைப் பகுதிக்குப் போய் ஓய்வெடுத்தலும் (மத். 14:12ஆ, 13; மாற். 6:30-32; லூக். 9:10; யோவா. 6:1).*
2. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14).*
3. *தண்ணீரின்மீது நடத்தல் (மத். 14:22-36; மாற். 6:45-56; யோவா. 6:15-21அ).*

Y. *ஜீவ அப்பம் பற்றி இயேசுவின் உரை (மற்றும் பேதுருவின் அறிக்கை) (யோவா. 6:21ஆ-71).*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை.*

A. *மூன்றாவது பஸ்கா (யோவா. 6:4; 7:1ஐக் காணவும்).*

B. *பாரம்பரியத்தை மதிக்கவில்லை என்று கடிந்து கொள்ளப்படுதல் (மத். 15:1-20; மாற். 7:1-23).*

C. *ஏரோதுவின் எல்லைப் பகுதியிலிருந்து விலகிச் செல்லுதல் (மத். 15:21; மாற். 7:24).*

D. *பெனிக்கியா (அல்லது கானானிய) பெண் ஒருத்தியின் மகளைக் குணமாக்குதல் (மத். 15:22-28; மாற். 7:25-30).*

E. *ஏரோதுவின் எல்லையைத் தவிர்த்தல் (மத். 15:29; மாற். 7:31).*

F. *காது கேளாதவர் உட்படப் பலரைக் குணமாக்குதல் (மத். 15:30, 31; மாற். 7:32-37).*

G. *நான்காயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 15:32-39அ; மாற். 8:1-9).*

H. *ஏரோதுவின் எல்லைப் பகுதியில் இருந்து இன்னொரு விலகிச் செல்லுதல்.*

1. *கலிலேயாவில்: இயேசுவின் விரோதிகளால் இன்னொரு தாக்குதல் - அதைத் தொடர்ந்து*

இன்னொரு பின்வாங்குதல் (மத். 15:39ஆ-16:12; மாற். 8:10-21).

2. பெத்சாயிதாவில்: பார்வையற்ற ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் (மாற். 8:22-26).
3. பிலிப்புச் செசரியாவின் அருகில்: நல்ல அறிக்கை (மத். 16:13-20; மாற். 8:27-30; லூக். 9:18-21).
4. பிலிப்புச் செசரியாவின் அருகில்: இயேசுவின் மரணம் முன்னுரைக்கப்பட்டது (மத். 16:21-28; மாற். 8:31-38; லூக். 9:22-27).
5. பிலிப்புச் செசரியாவின் அருகில் (எர்மோன் மலைமீது?): மறுரூபமாகுதல் (மத். 17:1-13; மாற். 9:2-13; லூக். 9:28-36).
6. அசுத்த ஆவிபிடித்த ஒரு பையனைக் குணமாக்குதல் (மத். 17:14-21; மாற். 9:14-29; லூக். 9:37-43).
7. கலிலேயாவுக்குத் திரும்புதல் (இயேசுவின் மரணம் மீண்டும் முன்னுரைக்கப்பட்டது) (மத். 17:22, 23; மாற். 9:30-32; லூக். 9:43-45).

I. தேவாலய வரியைப் பற்றிய கேள்வி (மத். 17:24-27).

J. சிறுபிள்ளையைப் போலிருத்தலின் அவசியத்தைப் பற்றிப் போதித்தல் (மத். 18:1-14; மாற். 9:33-50; லூக். 9:46-50).

K. கலிலேயாவில் கடைசி போதனை: சகோதரர்களுக்கு இடையில் பிரச்சனைகள் (மத். 18:15-35).

L. யூதேயாவுக்கு ஊழியம் திருப்பப்படுதல் (யோவா. 7:1; மத். 19:1 ஆகியவற்றைக் காணவும்).

1. இயேசு தமது சகோதரர்களால் கூடாரங்களின் பண்டிகைக்குச் செல்லும்படி வற்புறுத்தப்படுதல் (யோவா. 7:2-9).
2. இயேசு எருசலேமுக்கு அந்தரங்கமாகச் செல்லுதல் (லூக். 9:51-56; யோவா. 7:10).
3. வழியில்: சீஷத்துவம் பற்றிப் போதித்தல் (லூக். 9:57-62; மத். 8:19-22ஐக் காணவும்).

M. எருசலேமில்: கூடாரங்களின் பண்டிகை.

1. பண்டிகையின் நடுவில்: தேவாலயத்தில் போதித்தல் (யோவா. 7:11-36).
2. பண்டிகையின் கடைசி நாளில்: ஜீவத் தண்ணீர் பற்றிப் போதித்தல் (யோவா. 7:37-52).
3. பண்டிகைக்குப் பின்பு: கூடுதல் போதனை.
   a. விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண் (யோவா. 7:53-8:11).
   b. வெளிச்சம் மற்றும் இருள் பற்றிய போதனை (யோவா. 8:12-59).
   c. உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய பார்வையற்ற

தன்மைகள் பற்றிய போதனை (யோவா. 9:1-41).

d. நல்ல மேய்ப்பன் மற்றும் கூலியாட்கள் பற்றிய போதனை (யோவா. 10:1-21).

N. யூதேயாவில் பிந்திய கால ஊழியம்.

1. இயேசுவும் எழுபது பேர்களும் (லூக். 10:1-24).
2. இயேசுவும் ஒரு நியாய சாஸ்திரியும் (நல்ல சமாரியனின் உவமை) (லூக். 10:25-37).
3. இயேசு, மரியாள் மற்றும் மார்த்தாள் (லூக். 10:38-42).
4. இயேசுவும் அவரது சீஷர்களும் (ஜெபத்தின்மீதான போதனை) (லூக். 11:1-13).
5. இயேசுவும் ஒரு பரிசேயரும் (லூக். 11:37-54).
6. இயேசுவும் திரளான கூட்டத்தாரும் (லூக். 12:1, 13, 54; 13:1 ஆகிய வசனங்களைக் காணவும்).
   a. மாய்மாலம் பற்றிய போதனை (லூக். 12:1-12).
   b. பொருள்முதல்வாதம் பற்றி போதனை (லூக். 12:13-34).
   c. விழித்திருத்தல் பற்றிய போதனை (லூக். 12:35-48).
   d. வரவிருந்த துன்பம் பற்றிய போதனை (லூக். 12:49-59).
   e. மனந்திரும்புதல் பற்றிய போதனை (லூக். 13:1-9).
7. இயேசுவும் வியாதிப்பட்டிருந்த ஒரு பெண்ணும் (ஓய்வுநாள் பற்றி வாக்கு வாதம்) (லூக். 13:10-21).

O. பிரதிஷ்டையின் பண்டிகை (லூக். 13:22; யோவா. 10:22).

1. அவரது விரோதிகளுடன் முரண்பாடு தொடருதல் (யோவா. 10:23-30).
2. அவரைக் கொலை செய்யும் முயற்சிகள் தொடருதல் (லூக். 10:31-39).

P. பெரேயாவில் ஊழியம்.

1. “யோர்தானுக்கு அப்பால்” இயேசுவின் ஊழியம் (மத். 19:1, 2; மாற். 10:1; யோவா. 10:40-42; ஐக் காணவும்).
2. இயேசு கேள்வி கேட்கப்பட்டு எச்சரிக்கப்படுதல் (லூக். 13:23-35).
3. இயேசு, பரிசேயர் ஒருவரின் வீட்டிற்கு அழைக்கப்படுதல் - மற்றும் விருந்துகள் பற்றி ஏற்புடைய மூன்று பாடங்கள் (லூக். 14:1-24).
   a. தாழ்மையின் பாடம் (லூக். 14:7-11).
   b. சுயநலமின்மையின் பாடம் (லூக். 14:12-14).
   c. மாபெரும் விருந்து பற்றிய உவமை (லூக். 14:16-24).
4. இயேசு திரளான கூட்டத்தாரால் பின்பற்றப்படுதல் - மற்றும் முக்கியமான ஒரு பாடம் (லூக். 14:25-35).

5. *இயேசு, ஆயக்காரர்களாலும் பாவிகளாலும் பின்பற்றப்படுதல் - மற்றும் ஒரு பாடத்தைப் போதிக்க மனதைத் தொடும் மூன்று கதைகள்/உவமைகள் (லூக். 15:1-32).*
   a. *காணாமற் போன ஆடு (லூக். 15:3-7).*
   b. *காணாமற் போன காசு (லூக். 15:8-10).*
   c. *காணாமற் போன மகன் (லூக். 15:11-32).*
6. *இயேசு தமது சீஷர்களின் துணையுடன் செல்லுதல் - மற்றும் அநீதியான உக்கிராணக்காரன் பற்றிய உவமையிலிருந்து வலிவார்ந்த ஒரு பாடம் (லூக். 16:1-13).*
7. *இயேசு பரிசேயர்களால் கவனிக்கப்படுதல் - மற்றும் லாசரு, ஐசுவரியவான் "உவமையில்" இருந்து தெளிவான ஒரு பாடம் (லூக். 16:14-31).*
8. *பலவகைப் போதனைகள் (லூக். 17:1-10).*

Q. *பெத்தானியாவுக்கு.*
1. *லாசருவை எழுப்புதல் (யோவா. 11:1-46).*
2. *சனதெரீனின் கட்டளை (யோவா. 11:47-53).*

R. *பலஸ்தீனத்தில் கடைசிப் பயணம்.*
1. *எப்பிராயீமில் ஓய்வு (யோவா. 11:54).*
2. *சமாரியா கலிலேயா ஊடாக (லூக். 17:11ஆ).*

S. *எருசலேமுக்குக் கடைசிப் பயணம் (லூக். 17:11அ).*
1. *பத்து தொழுநோயாளிகளைக் குணமாக்குதல் (லூக். 17:12-19).*
2. *இராஜ்யத்தைப் பற்றிப் போதித்தல் (லூக். 17:20-37).*
3. *ஜெபம் பற்றிய உவமைகள்.*
   a. *விடாமுயற்சியான விதவையின் உவமை (லூக். 18:1-8).*
   b. *பரிசேயன் மற்றும் ஆயக்காரனின் உவமை (லூக். 18:9-14).*
4. *திருமணமுறவு பற்றிய கேள்விகள் - மற்றும் திருமணம் பற்றிய போதனை (மத். 19:3-12; மாற். 10:2-12).*
5. *பிள்ளைகள் பற்றிய தவறான புரிந்து கொள்ளுதல் - மற்றும் பிள்ளையைப் போலிருத்தல் பற்றிய போதனை (மத். 19:13-15; மாற். 10:13-16; லூக். 18:15-17).*
6. *நித்திய ஜீவனைப் பற்றிய ஒரு கேள்வி - மற்றும் செல்வங்கள்மீதான போதனை (செல்வந்தனான இளம் அதிகாரியைப் பற்றிய கதை) (மத். 19:16-26; மாற். 10:17-27; லூக். 18:18-27).*
7. *பலன்கள் பற்றிய கேள்வி - மற்றும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பற்றிய போதனை (மத். 19:27-30; மாற். 10:28-31; லூக். 18:28-30), திராட்ச தோட்டத்தில்*

வேலையாட்களைப் பற்றிய உவமையும் அடங்கும் (மத். 20:1-16).

8. வரவிருந்த அவரது மரணம் பற்றி சீஷர்களுக்கு அவரது முன்னெச்சரிக்கை (மத். 20:17-19; மாற். 10:32-34; லூக். 18:31-34).
9. ஊழியத்துவம் பற்றி அவரது சீஷர்களுக்குப் போதித்தல் (மத். 20:20-28; மாற். 10:35-45).
10. பர்த்திமேயுவையும் அவரது கூட்டாளியையும் பார்வையின்மையிலிருந்து குணமாக்குதல் (மத். 20:29-34; மாற். 10:46-52; லூக். 18:35-43).
11. சகேயுவை பொருளாசையிலிருந்து இரட்சித்தல் (லூக். 19:1-10).
12. தமது சீஷர்களைத் திருத்துதல் - மினாக்கள் (அல்லது "இராத்தல்களின்") உவமை (லூக். 19:11-27).

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம்.

A. வெள்ளிக்கிழமை பிற்பகல்: பெத்தானியாவுக்கு வருதல் (யோவா. 11:55-12:1).

B. சனிக்கிழமை மாலை: பெத்தானியாவில் ஒரு விருந்து (மத். 26:6-13; மாற். 14:3-9; யோவா. 12:2-11).

C. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்: எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசம் (மத். 21:1-11; மாற். 11:1-11; லூக். 19:29-44; யோவா. 12:12-19).

D. திங்கட்கிழமை: அத்திமரத்தை சபித்தல், தேவாலயத்தைச் சுத்திகரித்தல், பார்வையற்றவரையும் கால் ஊனமானவரையும் குணமாக்குதல் (மத். 21:12-19; மாற். 11:12-19; லூக். 19:45-48; 21:37, 38).

E. செவ்வாய்க்கிழமை: "கேள்விகளின் பெரியநாள்."

1. அறிமுகம்: காய்ந்துபோன அத்திமரம் (மத். 21:20-22; மாற். 11:20:26).
2. அதிகாரத்துவம் பற்றிய கேள்வி:
    a. கேள்வியும் இயேசுவின் பதிலும் (மத். 21:23-27; மாற். 11:27-33; லூக். 20:1-8).
    b. அவரது பதிலில் ஒரு பகுதி: மூன்று உவமைகள்.
        (1) இரண்டு மகன்கள் பற்றிய உவமை (மத். 21:28-32).
        (2) பொல்லாத குத்தகைக்காரர்கள் பற்றிய உவமை (மத். 21:33-46; மாற். 12:1-12; லூக். 20:9-19).
        (3) அரசர் மகனின் திருமண விருந்து பற்றிய உவமை (மத். 22:1-14).
3. கேள்விகளின் வரிசைத் தொடர்:

a. வரிசெலுத்துதல் பற்றிப் பரிசேயர்களும் ஏரோதியர்களும் கேள்வி கேட்டல் (மத். 22:15-22; மாற். 12:13-17; லூக். 20:20-26).
b. உயிர்த்தெழுதல் பற்றிச் சதுசேயர்கள் கேள்வி கேட்டல் (மத். 22:23-33; மாற். 12:18-27; லூக். 20:27-39).
c. பிரதான கட்டளையைப் பற்றி ஒரு நியாயசாஸ்திரி கேள்வி கேட்டல் (மத். 22:34-40; மாற். 12:28-34; லூக். 20:40).
d. "கிறிஸ்து"வைப் பற்றி இயேசு கேட்கின்றார் (மத். 22:41-46; மாற். 12:35-37; லூக். 20:41-44).

4. வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள்மீது கிறிஸ்துவின் சாபம் (மத். 23:1-39; மாற். 12:38-40; லூக். 20:45-47).
5. ஒரு விதவையின் காணிக்கை (மாற். 12:41-44; லூக். 21:1-4).
6. திரளான கூட்டத்தாருக்கு ஒரு உரை.
    a. இயேசு புறஜாதியாரால் தேடப்படுதல் (யோவா. 12:20-22).
    b. இயேசுவுக்கு வரவிருந்த மரணம் - யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருதிறத்தாருக்குமானது (யோவா. 12:23-36).
    c. இயேசு யூதர்களால் புறக்கணிக்கப்படுதல் (யோவா. 12:37-50).
7. எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை பற்றி அப்போஸ்தலர்களுக்கு உரை.
    a. விளக்கங்களும் வினாக்களும் (மத். 24:1-3; மாற். 13:1-4; லூக். 21:5-7).
    b. எருசலேமின் அழிவு பற்றிய போதனை.
        (1) எருசலேமின் அழிவுடன் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் (மத். 24:4-14; மாற். 13:5-15; லூக். 21:8-19).
        (2) எருசலேமின் அழிவுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் (மத். 24:15-35; மாற். 13:14-31; லூக். 21:20-36).
    c. இரண்டாம் வருகை பற்றிய போதனை.
        (1) பொதுவான போதனை.
            (a) இரண்டாவது வருகை அறிவிக்கப்படாததாக இருத்தல் (மக். 24:36-41; மாற். 13:32).
            (b) தயாராக நிலைத்திருத்தலின் அவசியம் (மத். 24:42-51; மாற். 13:33-37).
        (2) உவமைகளும் தொடர்பான போதனையும்:

(a) பத்துக் கன்னிகைகள் (மத். 25:1-13).
(b) தாலந்துகள் (மத். 25:14-30).
(c) செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் (மத். 25:31-46).

F. புதன்கிழமை: புயலுக்கு முன் அமைதி.
1. இயேசு: ஆயத்தமாகுதல் (மத். 26:1, 2; யோவா. 13:1).
2. சனதெரீன்: சூழ்ச்சி செய்தல் (மத். 26:3-5; மாற். 14:1, 2; லூக். 22:1, 2).
3. யூதாஸ்: காட்டிக்கொடுத்தல் (மத். 26:14-16; மாற். 14:10, 11; லூக். 22:3-6).

G. வியாழக்கிழமை: பஸ்காவுக்கு ஆயத்தம் செய்தல் (மத். 26:17-19; மாற். 14:12-16; லூக். 22:7-13).

H. வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள்.
1. கடைசி இராப்போஜனம்.
a. பஸ்கா ஆசரிக்கப்படுதல் (மத். 26:20; மாற். 14:17, 18; லூக். 22:14-18).
b. வாக்குவாதம் கடிந்துகொள்ளப்படுதல் (லூக். 22:24-30).
c. தாழ்மை செயல்விளக்கப்படுத்தப்படுதல் (யோவா. 13:2-20).
d. காட்டிக்கொடுத்தல்/மறுதலித்தல் ஆகியவை முன்னுரைக்கப்படுதல் (மத். 26:21-25, 31-35; மாற். 14:18-21, 27-31; லூக். 22:21-23, 31-38; யோவா. 13:21-38).
e. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதல் (மத். 26:26-29; மாற். 14:22-25; லூக். 22:19, 20; 1 கொரி. 11:23-26).
f. அப்போஸ்தலர்கள் உற்சாகப்படுத்தப்படுதல் மற்றும் எச்சரிக்கப்படுதல் (யோவா. 14:1-16:33).
g. பிதாவிடம் மன்றாடுதல் (யோவா. 17:1-26).
2. கெத்செமனே தோட்டம் (மத். 26:30, 36-46; மாற். 14:26, 32-42; லூக். 22:39-46; யோவா. 18:1).
3. காட்டிக் கொடுக்கப்படுதல் மற்றும் கைதாகுதல் (மத். 26:47-56; மாற். 14:43-52; லூக். 22:47-53; யோவா. 18:2-11).
4. யூதர்களால் “விசாரிக்கப்படுதல்” (முதல் மற்றும் இரண்டாம் நிலைகள்):
a. முதல் நிலை: அன்னாவினால் சோதிக்கப்படுதல் (யோவா. 18:12-14, 19-23).
b. இரண்டாம் நிலை: காய்பா மற்றும் சனதெரீன் சங்கத்தாரால் ஆக்கினைத் தீர்ப்பிடப்படுதல் (மத். 26:57, 59-68; மாற். 14:53, 55-65; லூக். 22:54அ,

*63-65; யோவா. 18:24).*

5. *பேதுருவினால் மறுதலிக்கப்படுதல் (மத். 26:58, 69-75; மாற். 14:54, 66-72; லூக். 22:54ஆ-62; யோவா. 18:15-18, 25-27).*
6. *யூதர்களால் "விசாரிக்கப்படுதல்" (மூன்றாம் நிலை): சனதெரீன் சங்கத்தாரால் தண்டனை விதிக்கப்படுதல் (மத். 27:1, 2; மாற். 15:1; லூக். 22:66-23:1; யோவா. 18:28).*
7. *ரோமர்களால் விசாரிக்கப்படுதல்:*
    a. *முதல் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (குற்றம் அறியாதவராகக் காணப்படுதல்) (மத். 27:11-14; மாற். 15:2-5; லூக். 23:2-7; யோவா. 18:28-38).*
    b. *இரண்டாம் நிலை: ஏரோது அந்திப்பாவுக்கு முன்பாக (குற்றம் இல்லாதவராகக் காணப்படுதல்) (லூக். 23:8-12).*
    c. *மூன்றாம் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (மரண தண்டனை விதிக்கப்படுதல்) (மத். 27:15-31அ; மாற். 15:6-20அ; லூக். 23:13-25; யோவா. 18:39-19:16).*
8. *யூதாஸின் மரணம்: தற்கொலை (மத். 27:3-10; அப். 1:18, 19).*
9. *இயேசுவின் மரணம்: சிலுவையில் அறையப்படுதல்.*
    a. *சிலுவைக்குப் பயணம் (மத். 27:31ஆ-34; மாற். 15:20ஆ-22; லூக். 23:26-33; யோவா. 19:17).*
    b. *சிலுவையில் முதல் மூன்று மணி நேரங்கள் (தொடங்கினது) (மத். 27:3-10, 31ஆ-35, 37-39; மாற். 15:20ஆ-29; லூக். 23:26-33, 38; யோவா. 19:17-22; அப். 1:18, 19).*

---

*யூதர்களின் காலக்கணக்கீட்டின்படி, இந்த நாளானது சூரியன் மறைவின் போது தொடங்கிற்று. நாம் வியாழக்கிழமை இரவு என்று கருதுவது யூதர்களுக்கு வாரத்தின் ஆறாவது நாளாக இருந்தது. இந்த நாள் பஸ்காவை ஆசரித்தலுடன் தொடங்கி இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்படுதலுடன் முடிந்தது.